Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 12 | ( 25 - 03 - 1992 ) | புதன்கிழமை | ஓசை: 36

## வவு. பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை எழுத சந்தர்ப்பம்

க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு கடந்த வருடம் விண்ணப்பித்திருந்தும் பரீட்சை எழுத முடியாது போன வவுனியா மாவட்டப் பரீட்சார்த்திகள் தங்களுடைய சுட்டிலக்கம் மற்றும் பாடவிபரங்களுடன் உடனடியாக வவுனியாகல்வித் திணைக்கள அலுவலகத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர் இந்த மாணவர்களுக்கு வவுனியாவில் விசேட பரீட்சை நிலையங்களை ஏற்படுத்தி பரீட்சையை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகும் க. பொ த. (உயர்தர) பரீட்சை, புதுவருடத்தை முன்னிட்டு 13ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறமாட்டாது.

# மணலாற்று சமரில் புலிகள் வெற்றி

# இராணுவ படையெடுப்பு முறியடிப்பு

## புலிகளின் உக்கிர தாக்குதல்களால் பேரிழப்புடன் படை பின்வாங்கியது

(மணலாறு)

மணலாற்றில் கடந்த ஏழு நாட்களாக நடைபெற்ற உக்கிர சமரில் விடுதலைப் புலி வீரர்கள் சிறிலங்கா இராணுவத்தின் பாரிய படையெடுப்பை முறியடித்து மகத்தான இராணுவ வெற்றியை ஈட்டியுள்ளனர். புலிகளின் வீராவேசத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் பாரிய இழப்புகளுடன் சிங்கள இராணுவம் நேற்றுக்காலை அவசர அவசரமாக முகாம்களுக்கு பின்வாங்கியது. இந்தச் சமரில் 50 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர். நூற்றிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆர்.சி.எல். பீரங்கி, 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கி உட்பட ஏராளமான ஆயுதங்களைஇராணுவம் விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்தது.

மணலாறு- கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து கடந்த 17 ஆம் திகதி காலை சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய படையெடுப்பொன்றை மேற்கொண்டனர். 3000திற்கு மேற்பட்டஇராணுவத்தினரும் புதிதாக சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட டாங்கிகளும் கவசவாகன அணியும் இந்த யுத்த முனைக்குக் கொண்டு வரப்பட்டன இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஒப்பரேசன் சிக்டர் - க ஜபார - என பெயரிடப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைக்கு விமானப்படையினதும், கடற்படையினதும் உதவியும் பெறப்பட்டிருந்தது.

கொக்குத் தொடுவாயிலிருந்து நாயாறு செல்வதை நோக்கமாகக் கொண்டு புறப்பட்ட இராணுவத்தினர்மீது நடவடிக்கை தொடங்கிய சில மணி நேரத்திற்குள் கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமிற்கு மிக அண்மையில் வைத்தே விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இத்தாக்குதலுக்கு சிறிலங்கா இராணுவ அணியின் மையப்பகுதி உள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பின்வாங்கிச் செல்கையில் 10படை கால்களைஇழந்தது

மணலாறு மாவட்டத்தில் பாரிய படை எடுப்பை நடத்திய சிறிலங்கா இராணுவம் புலிகளின் தாக்குதலினால திட்டத்தை இடை நடுவில் கைவிட்டு பின்வாங்கிச் செல்கையில் புலிகள் வைத்த ஜொனி கண்ணிவெடிகளில் சிக்கி பலர் கால்களை இழந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கண்ணிவெடியில் சிக்கி காலகளை இழந்த இராணுவத்தினர் பத்திறகும் அதிகமெனவும இதில் 10பேர்கால்களை இழந்துள்ளமை உறுதிப்படுத்தப பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

## கொக்கட்டிச்சோலை படுகொலை

## ஜனாதிபதிவிசாரணைக்குழு இறுதி அறிக்கை வெளியீடு

கடந்த வருடம் யூன் மாதம் இடம்பெற்ற கொக்கட்டிச்சோலை சம்பவந்தொடர்பாக விசாரிக்கவென சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும், சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக இராணுவ நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாதிருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

## நேரில் வந்து அனுமதி அட்டை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு யாழ் மாவட்ட பரீட்சை நிலையங்களுக்கு விண்ணப்பித்த வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்ற இரு இராணுவம் ஆஸ்பத்திரியில் மரணம்

(கொழும்பு)

மணலாற்றில் கடந்த ஒரு வாரமாக நடந்து வரும் சண்டையில் காயமுற்ற இரு இராணுவத்தினர் நேற்று ...னார்கள். மேலும் அறுபது இராணுவத்தினர் காயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று இராணுவ அதி

## வீரச்சாவு 2 ஆம் லெப். மதுரலிங்கம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின் போது இரண்டாம் லெப். மதுரலிங்கம் (சந்திரபோஸ் அன்ரன் பெர்னாண்டோ, ஆஸ்பத்திரி வீதி மன்னார்) என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

சமூக விஞ்ஞான மன்றத்தின் கருத்தரங்கு தொடர் 4 இல் "சோவியத் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களும், அதன் தாக்கங்களும்" என்ற தலைப்பில் பொருளியல் துறை தலைவர் கலாநிதி S K சண்முகநாதன் அவர்கள் உரை நிகழ்த்த உள்ளார்.

இக் கருத்தரங்கு கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக்குண்டு வீச்சுக்கு நெடுங்கேணியில் ஒருவர் பலி

வன்னி மாவட்டம் நெடுங்கேணியில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சுக்கு ஒருவர் பலியானார். நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இரண்டு இப்பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன இத் தாக்குதலில் பழம்பாசி எனும் இடத்தைச் சேர்ந்த வரதராசா மாஸ்டர் என்பவர் பலியானார்.

## குளத்திலிருந்து துப்பாக்கி புலிகளால் மீட்பு

தென்மராட்சி முள்ளியவளை குளம் ஒன்றிலிருந்துவிடுதலைப் புலிகளால் மூன்று எம் 70 ரக துப்பாக்கிகளும் மகசீன்கள் 04 உம் மீட்கப்பட்டுள்ளன.

...கச் சென்ற மூன்று பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து விடுதலைப்புலிகள் நடாத்திய தேடுதலில் இந்த ஆயுதங்கள் கண்டெடுக்கப்

# சிலாபத்துறை இராணுவம்

திய சிறிலங்கா இராணுவம் புலிகளின் தாக்குதலினால திட்டத்தை இடை நடுவில் கைவிட்டு பின்வாங்கிச் செல்கையில் புலிகள் வைத்த ஜொனி கண்ணிவெடிகளில் சிக்கி பலர் கால்களை இழந்துள்ளதாக

இக் கண்ணிவெடியில் சிக்கி காலகளை இழந்த இராணுவத்தினர் பத்திறகும் அதிகமெனவும இதில் 10பேர்கால்களை இழந்துள்ளமை உறுதிப்படுத்தப பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

இராணுவ நடவடிக்கைக்கு விமானப்படையினதும், கடற்படையினதும் உதவியும் பெறப்பட்டிருந்தது.

கொக்குத் தொடுவாயிலிருந்து நாயாறு செல்வதை நோக்கமாகக் கொண்டு புறப்

# சிலாபத்துறை இராணுவம் புலிகளால் விரட்டியடிப்பு

(சிலாபத்துறை)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாபத்துறை சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து முன்னேறிய இராணுவத்தினது முயற்சி விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து முறியடிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுக்காலை மேற்படி முகாமில் இருந்து நூற்றுக் கணக்கான இராணுவத்தினரைக் கொண்ட இராணுவ அணி ஒன்று முன்னேற முயற்சித்தது. இவ்வாறு முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர். சிலாபத்துறையில் இருந்து அகத்தி முறிப்பு என்ற பகுதி வரை முன்னேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றது இதனால் மேலும் முன்னேற முடியாத இராணுவத்தினர் நண்பகல் அளவில் அகத்தி முறிப்பில் நிலைகொண்டனர்.

இவ்வாறு நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மாலை தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர். இதன்போது இருதரப்பினருக்குமிடையில் கடும் சண்டை மூண்டது சில மணிநேரம் நடைபெற்ற கடும் சண்டையைத் தொடர்ந்து புலிகளின் தாக்குதல்களுக்குத் தாக்குப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு மாதப் போரில் 133 சிங்கள படை பலி

## பெருந்தொகை ஆயுதங்கள் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 23 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலிலும் மணலாற்றுப் போரிலும்சேர்த்து133க்குமேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவு இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர். பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் கைபபற்றினர்.

இவ் ஒருமாத காலத்திற்குள் இடம் பெற்ற மோதல்களில் வாழைச்சேனை பெண்டுகன் சேனையிலும், வெற்றிலைக் கேணியில் இடம்பெற்ற தாக்குதலும், ஆனையிறவு - தட்டுவான கொட்டி காவலரண்கள் மீதான தாக்குதலும், மணலாற்றில் நடந்தமோதல்களும் முக்கியமானவையாகும்.

இதே வேளை கடந்தமாதம் நடைபெற்ற மோதல்களில் இதற்கு முன்னைய மாதங்களைவிட கனரக ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன. முதல் முறையாக ஆர்.சி.எல்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி

# நினைவுக் கூட்டமும் உண்ணா விரதமும்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணா விரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும இன்று பளை வட்டவைப்பிரிவில இத்தாவில் முருகன் கோவிலில் இடம் பெறும்.

அடையாள உண்ணா விரதம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 வரை இடம் பெறும். நினைவஞ்சலிக் கூட்டம் இரவுஏழு மணிக்கு ஆரம்பமாகும். இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் புரட்சி, ஜவான், கடாபிமாஸ்ரர், இளவேணி ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காயமுற்ற இரு இராணுவம் ஆஸ்பத்திரியில் மரணம்

(கொழும்பு)

மணலாற்றில் கடந்த ஒரு வாரமாக நடந்து வரும் சண்டையில் காயமுற்ற இரு இராணுவத்தினர் நேற்று மருத்துவ மனையில் காலமானார்கள். மேலும் அறுபது இராணுவத்தினர் காயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# தீவகப் பகுதி ஆசிரியர் சம்பளம் நிறுத்த பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த தீவகப் பகுதி ஆசிரியர்களுக்கான சம்பளங் கொடுப்பனவை நிறுத்தி வைக்குமாறு யாழ் பிரதேசக் கல்விப பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி புலேந்திரனைப் பணித்துள்ளார்

காரை நகர், அனலைதீவு, ஊர்காவற்துறை, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு, மீண்டும் அப் பாடசாலைகளுக்குத் திருப்பிச் சென்று தங்கள் பாடசாலைகளில் கடமை ஏற்கும் வரை சம்பளம் வழங்கலை நிறுத்தி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

1991-11-11 இல் திகதியிட்ட கல்வி ராஜாங்க அமைச்சு சுற்று நிருபத்தின்படி இந்த நடவடிக்கையைமேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டப்பட்டுள

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் நடைபெறாது

(நமது நிருபர்)

விடுதலைப புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடாத்தப்படும் வாராந்தக் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வாரம் நடைபெறமாட்டாதென மேற்படி கழகம் அறிவித்துள்ளது.

# முத்தமிழ் விழா நிதிக்கு மாபெரும்கலைநிகழ்ச்சிகள்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் கடந்த ஆண்டைப்போல இவ் ஆண்டும் முத்தமிழ்விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

முத்தமிழ் விழாவில் தமிழீழ மக்கள் அனைவரினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு கலை நிகழ்ச்சிகளை நடாத்தி முத்தமிழ் விழாவிற்காக நிதி சேர்ப்பதென முத்தமிழ் விழாக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்

இதற்கமைய முதலாவது கட்ட நிகழ்ச்சிகள் எதிர்வரும சனிக்கிழமை (28-03-92) பிற்பகல் 6.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் ஞாயிற்றுக்கிழமை (29-03-92) இரவு 7 மணிக்கு கொண்டாவில் இராமகிருஷ்ண பாடசாலை அரங்கிலும் மாபெரும் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட உள்ளன.

''இந்த மண் எங்களின் சொந்தமண்'' சாந்தன் குழுவினர் வழங்கும் ''போர்க்கால ராகங்கள்'' இசை நிகழ்ச்சியும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் தயாரிப்பில் உருவான பொன். கணேசமூர்த்தியின் ''சந்தனக் காடு'' நாடகமும் இடம்பெற இருக்கிறது.

ரூபா 50, 25, 10 பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்களைப் பெற்று முத்தமிழ்விழா வெற்றிபெற ஒத்துழைக்கும் வண்ணம் முத்தமிழ்விழாப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# குளத்திலிருந்து துப்பாக்கி புலிகளால் மீட்பு

தென்மராட்சி மூக்கிலெனி குளப் ஒன்றிலிருந்துவிடுதலைப் புலிகளால் மூன்று எம் 70 ரக துப்பாக்கிகளும் ரவைக்கூடுகள் 04 உம் மீட்கப்பட்டுள்ளன.

இக் குளத்திற்கு மீன்பிடிக்கச் சென்ற மூன்று பொது மக்கள் கொடுத்த தகவல்களையடுத்து விடுதலைப்புலிகள் நடாத்திய தேடுதலில் இந்த ஆயுதங்கள் கண்டெடுக்கப் பட்டன.

# பாண்டிருப்புசுற்றிவளைப்பு 500 பேர் மீது விசாரணை

(மட்டக்களப்பு)

பாண்டிருப்பு, திராவந்திய மேடு ஆகிய கிராமங்கள் கடந்த சனியன்று அதிகாலை5-30 மணி தொடக்கம் 9-30 மணி வரை சிறிலங்கா இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது.

இத் தேடுதலின்போது 500 பேர் விசாரணைக்காகஅழைத்துச் செல்லப்பட்டனர் இவர்களில் மூவரைத்தவிர ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என தெரியவருகிறது.

# மீனவர் மீது துப்பாக்கிச் சூடு; சிறுவன் பலி; ஒருவர் காயம்

(குருநகர்)

நேற்றுக் (24-3-92) காலை 6.30 மணியளவில் பூநகரி-கல்முனை சிறிலங்கா இராணுவம் மீனவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவச் சிறுவன் ஒருவர் கொல்லப்பட்டார்.

மற்றொரு சிறுவன் படுகாயமடைந்தார். சமபவம் பற்றித் தெரியவருவதாவது:

பூவரசம் தீவுக்கு அப்பால் பந்தலடிக்கும், கல்லடிக்கும் இடையே கடற்றொழிலில் ஈடுபட்டு நின்ற சிறுவள்ளங்களை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் வெறித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தனரென்றும்-

வள்ளத்தில் இருந்த மற்றவர்கள் கடலில் பாய்ந்து தப்பிக் கொண்டதாகவும்-

வள்ளத்துள் பதுங்கி இருந்துவிட்டு தலையைத் தூக்கிய குருநகரைச் சேர்ந்த சூசைப் பிள்ளை சசிகுமார் (வயது 15) என்னும் சிறுவனின் தலையில் துப்பாக்கிச் சன்னம் தாக்கியதில் அவ்விடத்திலேயே அவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றொரு வள்ளத்தில் சென்ற குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த யேசுதாஸ் சுதாகர் (வயது 16) தோளில் படுகாயமடைந்து திருச்சிலுவைக் கன்னியர் வைத்தியசாலையில் முதலுதவி வழங்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாரென்றும்தெரிவிக்கபபடுகிறது. (21)

## கல்வி அமைச்சிற்கு வழங்கிய

# 140 மில். ரூபா முற்பணம் திரும்பப்பெறுவதுசந்தேகம்

(கொழும்பு)

முற்பணமாக கல்வி அமைச்சினால் அதன் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 140 மில்லியன் ரூபா பணத்தைத் திரும்பப் பெறுவது சந்தேகமானது என்று கணக்காளர் நாயகம் காமினி ஏப்பாவின் அறிக்கை கூறுகின்றது. மாதாந்தக் கணக்கறிக்கைகளை கல்வி அமைச்ச

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சென்ற 21 ஆந் திகதி சனிக்கிழமை இயக்கச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் லொறியில் இருந்து ஓர் உரப்பையுடன் நிவாரண அட்டையும் அத்துடன் ஒரு கடிதமும் தவறிவிட்டன. ஆகவே தயவு செய்து இதைக்கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன் (2328)

---

அல்வாய் வடமத்தி இன்பருட்டி, அழகேஸ்வரன் விஜயமாலா என்பவரின் மணிபேஸ்சும், அடையாள அட்டையும் 19 - 3 - 1992 இல் அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்தில் தொலைந்து விட்டன. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஆலயத்தின் காரியாலயத்தில் அல்லது கிராமசேவையாளரிடம் ஒப்படைக்கவும். கா. இராஜரட்னம், குயிலநாதன் நியூஸ் ஏஜென்சி, நாவலடி, அல்வாய். (2331)

---

### அறிவித்தல்

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரால் டாக்டர் ஹனிமனது ஞாபகார்த்த விழாவும் பொதுக் கூட்டமும் 29- 3- 92 ஞாயிற்றுக்கிழமை காலை9.00மணிக்கு 35 ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (2327)

---

**MANAGEMENT ENGLISH**

English Grammar Spoken English, English for Beginners மூன்று மாத ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. V.N Kandasamy A.I.B. part I (London) Inter (London) 87, திருநெல்வேலி றோட், கொக்குவில். (2333)

---

### நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தொண்டர் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களின் நாற்பத்தோராவது நினைவு தினம் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் நல்லூரின் கம்பன் கோட்டத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29 - 3 - 92 காலை 9 . 00 மணிக்கு நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் ஈழகேசரித் தமிழ் எனும் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் தாளக்காவடி, நாடகம் ஆகியனவும் இடம் பெறும்.

தென்னாபிரிக்காவின்

---

# தமிழீழத்தை வளப்படுத்த முன்வர வேண்டும்

**- சி. வேலாயுதம்**

(யாழ்ப்பாணம்)

''ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்'' என்று பாரதியார் தமிழ் மக்களுக்கு உணர்வூட்டியதற்கமைய நாம் ஆயுதம் செய்து விட்டோம். அதாவது சினத்தயாரிப்புகவச வாகனங்களைக் கூடப் பிளந்தெறியக் கூடிய கண்ணிவெடிகள் உட்பட பல ஆயுதங்களைச் செய்து விட்டோம். அதுபோல நாம் காகிதம் செய்து சிறந்த அறிவு நூல்களையும் வெளியிட்டு தமிழீழத்தை வளப்படுத்துவோம்.''

இவ்வாறு யாழ் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வர்த்தக மாணவர் மன்றத்தின் வணிக ஜோதி பதினான்காவது மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் அரசாங்கம் காகிதம் உட்பட பல பொருள்களுக்குத் தடை போட்டுள்ள இக்காலகட்டத்திலும் இப்பாடசாலை மாணவர்கள் இம்மலரை சிறந்த முறையில் வெளியிட்டுள்ளமை மிகவும் பாராட்டத்தக்க ஒரு சாதனையாகும் என்றார்

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி கல்லூரி மண்டபத்தில் வர்த்தக மாணவர் மன்றத்தலைவர் திரு. பா. வாசன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அதிபர் திரு. மு. இராமலிங்கம் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி.சிவராசா நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம், திரு. அருள் மாஸ்ரர் ஆகியோரும் உரையாற்றினர்.

வணிகஜோதி மலர் ஆசிரியர் செல்வன் த. விஜயசேகரன் நன்றி கூறினார்.

---

# நாடுதிரும்பிய அரசஊழியர் உடனடி நியமனம் பெற ஏற்பாடு

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து நாடு திரும்பியுள்ள தமிழ் அகதிகளில் அரசாங்க ஊழியர்களாக இருந்தவர்களை மீண்டும் அவர்களது பதவிகளில் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சு, சகலஅமைச்சுச் செயலாளர்களையும் மாகாணசபை செயலாளர்களையும் திணைக்களத் தலைவர்கள், ஆளுநரின் செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளது.

---

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்

# உடுகம்பொலவின் கடவுசீட்டு பறிமுதல் செய்ய உத்தரவு

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவின்கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாளிகாவத்தை நீதிமன்ற மாஜிஸ்திரேட் அமரசேகரா குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்குநேற்றுவிடுத்த அறிவித்தலில் திரு. உடுகம்பொல நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதை உறுதிப்படுத்த இதனை மேற்கொள்ளுமாறு அறிவித்ததுடன் இது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் தேசிய புலனாய்வு பணியக உதவி சுப் பிரீண்டனுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

பல்வேறு மனித உரிமைகள் மீறல் சம்பவங்களில் பிரதிப் பொலிஸ்மாஅதிபர் உடுகம்பொல சம்பந்தப்பட்டவர் என்பது தெரிந்ததே.

---

# அதிகாரப் பகிர்வில் டி. கிளார்க் உறுதி

(நியூயோர்க்)

தென் ஆபிரிக்காவின் கறுப்பின மக்களுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ள தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப் டபிள்யூ. டீ கிளார்க் உறுதியளித்துள்ளார்.

சி என். என். செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியொன்றின் போதே டீ. கிளார்க் இத்தகவலை வெளியிட்டார். அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ளும் விடயத்தில் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடும் முயற்சியில் அவர்களை இணங்கச் செய்யும் பணிகள் துரிதப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீர்திருத்தங்கள் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பில் தமக்குக் கிடைத்துள்ள அமோக வெற்றி தனது திட்டத்தை செயல்படுத்தப் பெரிதும் உதவுமெனத் தாம் கருதுவதாகவும்,

கறுப்பு இனத்தவர்களை அழைத்து எனது கருத்தை வெளியிட்டு திட்டத்தைத் துரிதப்படுத்த நான் ஆவல் கொண்டுள்ளேன். அவர்களுடன் இணக்கம் ஏற்பட்டதும் அதனை உடனடியாக அமுல் செய்ய விரும்புகிறேன் என்றும்

1993 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் பிரச்சினைகள் யாவும் முற்றாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதே என நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

---

## டில்லிக்கு விஜயம்

உக்ரைன் அரசுத் தலைவர் லியோனிட் கிரவ்சுக் ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுப் புதுடில்லி வந்து சேர்ந்துள்ளார் உயர்மட்ட தூதுக்குழுவொன்றும் அவருடன் வருகை தந்துள்ளது இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தும்பல ஒப்பந்தங்களில் இருநாடுகளும் கையெழுத்திடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## தவறி விட்டது

16. 03. 92 கைதடிச் சந்திக்கும் மருதனாமடம் சந்திக்குமிடையில் ஒரு தாலிக்கொடி தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் புனிதமான மாங்கல்யத்தை தந்துதவவும். ஈழநாதம் கார்யாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[2335]

---

## The Northern Province Affiliated University College

## Private Security Services

*Quotations are invited from security firms registered with the Civil Security Division of the Ministry of Defence for providing Security Services to the Northern Province Affiliated University College at Vavuniya.*

*Quotations will close at 2. 30 p.m on 04 th April, 19 92.*

*Preference will be given to those Security Firms which are Providing such services to the Higher Educational Institution and Institutes.*

*Quotations should be sent to the Assistant Registrar, Northern Province Affilited University, College. Vavuniya.*

**DIRECTOR**

*The Northern Province*
*Affiliated University College,*
*Vavuniya.*
*17 th March, 1992.*

(சி/4085)

---

**The Northern Province Affiliated**

---

# புறப் பொருள் வெண்பா நூல் வெளியீடு

(வட்டுக்கோட்டை)

புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி நூல் மூலம் புறப்பொருளை ஆராய்பவர்களுக்கு என்னால் பாதையொன்று திறந்து விடப்பட்டுள்ளது. இந்தப் பாதையை செப்பனிடுதல் வருங்கால நூலாராய்ச்சியாளரின் கடமை என புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி நூலை இயற்றிய புலவர் நா சிவபாத சுந்தரனார் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நூல் வெளியீட்டு விழாவில் பதிலுரை வழங்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பழைய காலத்தில் புலவர்கள் போர்க்களத்திற்குச் சென்று போர்க்கள நிகழ்ச்சிகளை அவதானித்தனர். பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அந்த நிலங்களின் தன்மையை பொறுத்து மருதம், முல்லை, பாலை என நிலங்களின் வகைகளைப் பிரித்தனர். இவ்வாறான வசதிகள் இன்றைய புலவர்களுக்கும் செய்து கொடுக்கப்பட வேண்டும். மணலாறு பகுதிக்கு புலவர்கள் சென்று அப்பகுதிகளைப் பற்றி தெரிவிக்க வேண்டும் என்று கூறினார்.

புலவர் நா. சிவபாத சுந்தரனாரின் இந்த நூலைப் பற்றி பல அறிஞர்களும் தமிழ் அபிமானிகளும் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்ட விபுலானந்தர் நூற்றாண்டு நினைவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

---

## ஹோமியோபதி, அக்குபஞ்சர் வகுப்புக்கள் ஆரம்பம்

மீண்டும் புதிய ஹோமியோபதி, அக்குபஞ்சர் வகுப்புக்கள் 03-05-92 ஆம் திகதி அன்று ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் சங்க அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி 25-04-92

தலைவர் தலைவர்

---

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 1-ம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 31-03-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விபரப்படி வெலியாத்துப் பணம் அறவிடப்படுமெனவும், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்கான வரியை அக்கந்தாயங்களின் முதல் மாதத்துக்குள் 5 வீதம் வரிக் கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

வெற்றுக் காணிகள் )
குடியிருப்புக் காணிகள் ) 15 வீதம்

இவையல்லாத காணிகளுக்கு 20 வீதம்

காசோலைகளை, காசுக்கட்டளைகளை, அஞ்சல் கட்டளைகளை ''யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும் போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவு செய்து இணைக்குக.

தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் ஈழகேசரித் தமிழ் எனும் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் தாளக்காவடி, நாடகம் ஆகியனவும் இடம் பெறும்.

## தென்னாபிரிக்காவின் முன் மாதிரி

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் முடிவு முன் மாதிரியானது என்று அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை ஒழிப்பதற்கு அந்த நாட்டு மக்கள் அளித்த தீர்ப்புக்கும், அதற்காகப் பாடுபட்ட அதிபர் டி. கிளார்க், மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா ஆகியோருக்கு மகிழ்ச்சியும் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார்.

## ஒருநாள் உண்ணாவிரதம்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியையும் மகளிர் அணியையும் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசனை விடுவிக்கக் கோரியே இந்த உண்ணாவிரதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் விநியோகத்தில் வெட்டு

(கொழும்பு)

பிரதான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவேகமாக குறைந்து வருவதையடுத்து நீர் மின் விநியோகங்களில் இன்னும் சில வாரங்களில் வெட்டு வரலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.


Quotations should be sent to the Assistant Registrar, Northern Province Affiliated University, College. Vavuniya.

**DIRECTOR**

*The Northern Province Affiliated University College, Vavuniya.*
*17 th March, 1992.*

(சி/4085)



**The Northern Province Affiliated**

**UNIVERSITY COLLEGE**

*VACANCY*

*Applications are invited from suitable candidates for the following post.*

**POST:** *Stenographer [casual] - English*

**SALARY:** *Rs. 83/40 per day.*

*(In addition to the salary, variable cost of living allowance and other allowances will be paid)*

**QUALIFICATIONS:**

*I. G. C. E (Ordinary level) Examinations in six subjects at not more than two sittinngs with credit passes in three subjects including English.*

*2. Proficiency in English Stenography with the following minimum speeds:*
*Shorthand - 80w. p.m.*
*Typing :35 w. p.m.*

**SELECTION:** *By Test and Interview.*

**AGE:** *Not more than 40 years.*

*Applications giving full Name, address, date of birth, age on 04 th April, 1992, Educational and professional Qualifications, experience, any other relevant information with names and addresses of two referess, should be sent to The Assistant Registrar, The Northern Province Affiliated University College Railway Station Road, Vavuniya to reach him on or before 4 th April, 1992. The top left hand corner of the envelope should be marked*

*'Post of Stenographer (Casual) English'*

*Applications from employees in public sector institutions should be channeled through the Heads of the respective institutions However, applicants are advised to send a copy of their application direct to the address given above.*

*Applications received after the closing date and incomplete applications will not be considered.*

**Director**

*The Northern Province Affiliated University College, Railway Station Road, Vavuniya,*
*17 th March. 1992.*

(சி/4084)



## ஹோமியோபதி, அக்குபஞ்சர் வகுப்புக்கள் ஆரம்பம்

மீண்டும் புதிய ஹோமியோபதி, அக்குபஞ்சர் வகுப்புக்கள் 03-05-92 ஆம் திகதி அன்று ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் சங்கஅலுவலகத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.


விண்ணப்ப முடிவு திகதி 25-04-92

| | |
|---|---|
| தலைவர் | தலைவர் |
| வடஇலங்கைஹோமியோபதி சங்கம் | வடஇலங்கைஅக்குபஞ்சர் சங்கம் |

இல, 35, நாவலர் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(2334)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை ராயூ**

**(கந்தையா - முகுந்தன்)**

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 1968. 01. 27 | 1989. 03. 25 |

இருபத்தொரு ஆண்டுகள் இம் மண்ணில்
இருந்தாய் - உலாவந்தாய்
பெரும் பேறாய் உனைப் பெற்ற
பெரு மகிழ்வில் களித்திருந்தோம்.
விருப்புடனே களம் சென்று
வீரம் விதைத்தாய்!
வரும் காலமெல்லாம் வாழும் உன்நாமம் - அதனால்
ஆண்டு மூன்று போனாலும் அகலாது உன் நினைவு.

-குடும்பத்தினர்-

மானிப்பாய்.

(சி-4095)


இவையல்லாத காணிகளுக்கு 20 வீதம்

காசோலைகளை, காசுக்கட்டளைகளை, அஞ்சல் கட்டளைகளை "யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்" சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும் போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவு செய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23-03-1992

(சி/4097)


## நினைவு கூருகின்றோம்...

**1992-03-25**

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விநாயக முதலியார் வீதியைச் சேர்ந்த தமிழ் மாணவன், கல்லூரி வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு அரியாலையில் காவற் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**அரபாத்** (பாபு ஜோண் பாலேந்திரா - அரியாலை)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேச விரோத சக்திகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். அரசன்** (ராம்குமார் - தாமரைக்கேணி, மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு ஆனைக்கோட்டை பள்ளத்தடிப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**லெப். ராஜு** (கந்தையா முகுந்தன் -மானிப்பாய்)

**2ஆம் லெப். காந்தி** (இரட்ணசபாபதி புஸ்பகாந்தன் - மானிப்பாய்)

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**சிரஞ்சீவி** (முத்தையா மனோகரன் - உடப்பு புத்தளம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி.**

(4094)

**சிந்தனைக்கு**

உபதேச மொழிகளை விட முன்மாதிரிகள் மனத்தில் பலமாகப் பதிகின்றன.

- ஹென்றி பீல்டிங்

ஈழநாதம்

31, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம் 25-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

# தொண்டாவின் கருத்து புகழ்ச்சி வார்த்தையல்ல

"விடுதலைப் புலிகளை அழிப்பதென்பது தமிழ் மக்களை அழிப்பதற்கொப்பானதாகும். தமிழ்மக்கள் இருக்கும் வரை விடுதலைப் புலிகளும் இருக்கவே செய்வார்கள். சரியோ, பிழையோ விடுதலைப் புலிகள் இயக்கம் தான் யார் விரும்பினால் என்ன, விரும்பா விட்டால் என்ன, அவர்களே போராட்ட வீரர்களாக உருப்பெற்றுள்ளார்கள்'' இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது மாத்திரமல்ல, அவர்கள் தமது இலட்சியத்தில் மிக உறுதியாக உள்ளனர். ஏனைய தமிழ்க்குழுக்களைப் பொறுத்து அவர்கள் போராட்டத்திலும் செயற்பாட்டிலும் சோர்வடைந்துள்ளதோடு, தமது இலட்சியத்தையே கைவிட்டுள்வார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமானின் இந் நிலைப்பாடானது விடுதலைப் புலிகளுக்காக ஏதோ வலிந்து தெரிவிக்கப்பட்டதொன்றல்ல. உண்மை நிலையை உணர்ந்து, நிலைமைகளைச் சரியாகக் கணிப்பிட்டதனால் வெளிவந்ததொன்றாகும். அமைச்சர் தொண்டமானின் அவதானிப்பும் கணிப்பீடும் சடுதியாக ஏற்பட்டதொன்றன்று. எழுபதுகளின் மத்தியிலிருந்து தொடங்கி சிறிலங்கா பொலிஸ் இராணுவம், இந்திய இராணுவம் உளவுப்படைகளின் நெருக்குதல், அரசியல் நெருக்கடிகள் எதற்குமே விட்டுக்கொடுக்காமல் போராடிய விடுதலைப் புலிகளின் தளர்ச்சியில்லாத போராட்டத்தை அவதானித்ததன் வெளிப்பாடாக வந்த கருத்தாகும்.

அமைச்சர் தொண்டமான் எப்போதாவது தமிழீழக் கோரிக்கையையோ அன்றி ஆயுதப் போராட்டத்தையோ அங்கீகரித்தவர் அல்லர். அமைச்சர் தொண்டமான் தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்தவேளை, கூட்டணியின் தலைமைத்துவத்தில் இருந்து கொண்டே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஹட்டன் மாநாட்டில் தமிழீழக் கோரிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியவர்.

மேலும், ஆயுதப்போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும் வன்மையாகக் கடந்த காலத்தில் கண்டித்தும் வந்தவர் அமைச்சர் தொண்டமான். தென் ஆசியப்பகுதியிலேயே பலமான தொழிற் சங்கமாகவும் இலட்சக்கணக்கான தொழிலாளர் பட்டாளத்தையும் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலை...

# தமிழ் நாட்டில் விழிப்பை ஏற்படுத்தும் புலிகளின் தியாகப் போர்

விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகக்குரல் எழுப்பியதற்காக தமிழ் நாட்டில் சிறையில்வாடும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் திரு.நெடுமாறன் சமீபத்தில எரிமலைப் பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியை இங்கு தருகின்றோம். இந்தப்பேட்டியில் விடுதலைப் புலிகளின் போராட்டம்பற்றியும் தமிழக அரசியல்பற்றியும் திரு.நெடுமாறன் எடுத்து விளக்குகிறார்.



தலைவர் பிரபாகரன்

கேள்வி:

தமிழீழப் போராட்ட வரலாற்றில் நீண்ட காலத் தொடர்பு கொண்டுள்ள நீங்கள் தமிழீழப் போராட்ட வளர்ச்சியின் தற்போதைய நிலை குறித்து என்ன கருத்துக் கொண்டுள்ளீர்கள்?

பதில்;

தமிழீழ விடுதலைப் போராட்டம் சரியான திசையில் வலுவாகக் காலூன்றி முன்னேறிக் கொண்டிருக்கிறது. 1980 க்கு முன்னால் பயங்கரவாதக் குழுவாக விடுதலைப் புலிகள் இயக்கம் மாற்றாரால் கருதப்பட்டது. 1980 களின் தொடக்கக் கால கட்டத்தில் கெரில்லாக் குழுக்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. 1980 களின் நடுவில் கட்டுப்பாடு நிறைந்த வலிமையான கொரில்லாப் படையாக உருவெடுத்தது. 1990 களின் தொடக்கத்தில் சிறந்த மரபு வழி இராணுவமாகவும் தென்னாசியாவில் பலம் மிக்க அரசியல் இராணுவ சக்தியாகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் வீறுநடை போடுகின்றது. கடந்த பத்து ஆண்டுகளில் அதனுடைய சாதனைகளும் வளர்ச்சியும் பிரமிக்கத் தக்கவையாகும்,

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சிதைக்க சிங்களப் பேரினவாதவெறியர்களும், இந்திய உளவுத்துறையும் இடைவிடாது மேற்கொண்ட சீர்குலைவு வேலைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே உறுதியாக எதிர்த்து நின்றது. மற்ற இயக்கங்கள் யாவும் துரோகக் குழுக்களாக மாறி மாற்றார் வலையில் வீழ்ந்தன. இத்துரோகக் குழுக்களை ஒடுக்குவதிலும் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றனர்.

பேச்சுவார்த்தை என்ற பெயரால் இந்திய, சிங்கள அரசுகள் விரித்த நயவஞ்சக

...ரமாகப் போராடி இறுதியில் தங்கள் மண்ணிலிருந்து அப்படைகளை வெளியேற வைத்த பெருமை விடுதலைப் புலிகளுக்கே உண்டு.

மூந்நூறு ஆண்டு காலமாக அந்நியர் கொடி பறந்த யாழ். கோட்டையைக் கைப்பற்றிப் புலிக்கொடியைப் பறக்க விட்ட பெருமை புலிகளுக்கே உண்டு.

தமிழீழப்போராட்டத்தைப் படிப்படியாகமக்கள் போராட்டமாக மாற்றியிருப்பது மாபெரும் சாதனையாகும்.

தமிழீழப் போராட்டம் சரியான திசையில் முன்னேறிச் செல்கின்றது என்பதற்கு மேற் கண்டவை சான்றாகும்.

கேள்வி:-

ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்றபின் தமிழீழப் போராட்டத்திற்குத் தமிழகம் வகித்து வந்த பாத்திரம் எந்தளவில் எந்த வகையில் மாற்றமடைந்துள்ளது?

பதில்:-

தமிழீழப் போராட்டத்திற்குத் தமிழக மக்கள் வகித்து வரும் பாத்திரத்திற்கும் தமிழக முதலமைச்சர் வகித்து வரும் பாத்திரத்திற்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. முன்னாள் முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்களாக இருந்தாலும் இப்போதைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவாக இருந்தாலும் சரி இருவரின் நிலையும் இப்பிரச்சினையில் ஒன்றுதான்.

தமிழீழவிடுதலைப்போராட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. கட்சி, மத, சாதி வேறுபாடின்றி தமிழ் மக்கள் அனைவரினாலும் ஆதரிக்கப் படவேண்டிய போராட்டமாக அதைக்கருதாமல் தங்களின் அரசியல் ஆதாயங்களுக்கான பிரச்சினையாகவே இதை...

போராட்டத்தை அங்கீகரிக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தல்.

★ தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான சகல நிதிமற்றும் உதவிகளைத் திரட்டல்.

மேலே கண்ட நடவடிக்கைகள் எதனையும் திரு. கருணாநிதியும் செல்வி. ஜெயலலிதாவும் செய்யவில்லை. மாறாக இப்பிரச்சினையில் இந்திய அரசு எதை விரும்புகிறதோ அதை இருவரும் செய்தனர்.

எதிர்கட்சியாக இருந்த போது தமிழீழப் போரட்டத்தை ஆதரிப்பது போல் பசப்பினார்கள். ஆளுங்கட்சியான பிறகு எதிராக மாறினார்கள்.

திரு. கருணாநிதி அவர்களின் மருமகன் மாறன் மத்திய அமைச்சராக இருந்த போது

"நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பிய பெருமைமிக்க போராட்டம தமிழீழப் போராட்டமாகும் மிகக் குறுகிய காலத்தில மகத்தான சாதனைகள் புரிந்து உலக நாடுகளின் விடுதலை இயக்கங்களுள் முதன்மை பெற்ற பெருமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உண்டு. தமிழர் வரலாற்றில் புதிய யுகத்தைப் பிறக்கச் செய்தவர் "தம்பி பிரபாகரன்'' ஆவார் வீரமே ஆரமாகவும், தியாகமே அணியாகவும் கொண்ட அவரால் இன்று உலகத் தமிழினமே பெருமை அடைந்துள்ளது உலகத்தமிழினத்தின் விடிவெள்ளியாக அவர் திகழ்கிறார். நாளை அவர் தலைமையில் மலரப்போகும் தமிழீழம் உலகத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை''

(அவர் மூலம் பிரதமர் வி. பி. சிங் அவர்களிடம் நிலைமையை விளக்கி ஆதரவு திரட்டியிருந்திருக்கலாம். ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியின் கண்டனத்துற்கு அஞ்சி திரு கருணாநிதி செயல்பட்டார். தமிழகத்தில் சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகளை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க திரு. கருணாநிதி தயங்கவில்லை. இன்று அதே வழியில் செல்வி. ஜெயலலிதாவும் செல்கிறார்.

தமிழீழப் பிரச்சினையின் உண்மையான வடிவத்தை டில்லிக்கு உணர்த்துவதற்குப் பதிலாக டில்லியின் நோக்க மறிந்து அதற்கேற்பவே இருவரும் செயற்பட்டு வந்துள்ளனர்.

தமிழீழப் போராட்டம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் அதற்குக் கைகொடுத்து உதவும் துணிவு படைத்த ஒரு...

★ தமிழ் மொழி, வரலாறு, இலக்கியம், பண்பாடு, கலைகள் வளர்ச்சிக்குப் பாடுபடுதல்.

★ தமிழரிடையே சாதி, மத வேறுபாடுகளை அறவே போக்கி அனைவரும் தமிழரே என்ற இன உணர்வை ஊட்டுதல்.

கேள்வி -

தமிழக அரசியல்வாதிகளாலும், அறிஞர்களாலும் ஓர் நேர்மையான அரசியல் வாதி எனப் பொதுவாகக் கருதப்படுகின்ற நீங்கள் தமிழக அரசியலில் நீண்ட காலம் அனுபவம் பெற்றுள்ளீர்கள். அப்படியிருந்தும் ஆட்சி பீடத்தில் அமர முடியாதுள்ளதே, அதற்குக் காரணம் என்ன?

பதில்:-

சந்தர்ப்ப வாதமும், பதவி வெறியும், ஊழலுமே அரசியல் என ஆகிவிட்ட தமிழகத்தில் நேர்மையாளன் எனப்பாராட்டப்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பதவி இல்லையே என்பது பற்றி நான் கவலைப்படவில்லை. இலட்சியத்தைவிட்டுக்கொடுத்தாவது பதவியைப் பெற வேண்டும் என்பதை நான் வெறுக்கின்றேன். தமிழ் நாட்டில் இன்று நிலவும் அதிகார அரசியல் போக்கு நீண்ட காலம் நீடிக்க முடியாது. காலம் கனியும் வரை காத்திருப்பது தான் விவேகம். நாம் எதிர்பார்க்கின்ற சமூக விழிப்புணர்வு மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கின்றது.

கேள்வி.-

அப்படியானால் இந்தச் சமூக மாற்றங்கள் தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா?.

பதில்:-

அரசியல் என்பது பதவிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது அல்ல. மாறாக தொண்டினாலும் தியாகத்தினாலுமே கட்டப்பட வேண்டும். அது தான் நிலைத்து நிற்கும் என்ற உண்மையை எமது மக்கள் மெல்ல உணரத் தொடங்கியுள்ளனர்.

வெற்றுக் கோஷங்களையும் வீண் ஆரவாரங்களையும் கண்டு மயங்கிய தமிழ்நாட்டு மக்கள் நடுவில் தமிழீழ இளைஞர்களின் அரிய தியாகங்கள் மகத்தான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன. கழுத்தில் நஞ்சுக் குப்பியுடனும், கையில்...

கேள்வி:-

தமிழீழப் போராட்டம் பற்றியும் தமிழீழப் புலிகள் பற்றியும், தலைவர் பிரபாகரன் பற்றியும் உங்களது நீண்ட கால அவதானிப்பின் வெளிப்பாடு என்ன?

பதில்:-

நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பிய பெருமைமிக்க போராட்டம் தமிழீழப் போராட்டமாகும் மிகக் குறுகிய காலத்தில் மகத்தான சாதனைகள் புரிந்து உலக நாடுகளின் விடுதலை இயக்கங்களுள் முதன்மை பெற்ற பெருமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உண்டு

தமிழர் வரலாற்றில் புதிய யுகத்தைப் பிறக்கச்செய்தவர் "தம்பி பிரபாகரன்'' ஆவார். வீரமே ஆரமாகவும் தியாகமே அணியாகவும் கொண்ட அவரால் இன்று உலகத் தமிழினமே பெருமை அடைந்துள்ளது. உலகத் தமிழினத்தின் விடிவெள்ளியாக அவர் திகழ்கிறார். நாளை அவர் தலைமையில் மலரப்போகும் தமிழீழம் உலகத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. ★

# காங்கிரஸ் அரசை அஜித்சிங் பிரிவு ஆதரிக்கும்

(டில்லி)

ஆட்சியிலுள்ள அரசாங்கம் நீடிக்கச் செய்வதை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கப் போவதாக ஜனதா தளத்திலிருந்து பிரிந்த...

டத்தையோ அங்கீகரித்தவர் அல்லர். அமைச்சர் தொண்டமான் தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்தவேளை, கூட்டணியின் தலைமைத்துவத்தில் இருந்து கொண்டே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஹட்டன் மாநாட்டில் தமிழீழக் கோரிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியவர்.

மேலும், ஆயுதப்போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும் வன்மையாகக் கடந்த காலத்தில் கண்டித்தும் வந்தவர் அமைச்சர் தொண்டமான். தென் ஆசியப்பகுதியிலேயே பலமான தொழிற் சங்கமாகவும் இலட்சக்கணக்கான தொழிலாளர் பட்டாளத்தையும் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தன்னிகரிலாத் 'தலைவராக' விளங்கும் திரு. தொண்டமான் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தொழிற்சங்கப் போராட்டங்களான வேலை நிறுத்தம், மறியல் என்பனவற்றிற்குப்பதிலாக அகிம்சை, பிரார்த்தனை என மிகவும் பலவீனமான போராட்ட வடிவங்களையே தெரிவு செய்தும் வருகின்றார்.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமான், விடுதலைப் புலிகளையும், அவர்களின் இலட்சியம் மீதான பற்றுதலையும் அங்கீகரிப்பதென்பது அரது நீண்டகால அரசியல் அனுபவத்தில் அவர் கற்றுக் கொண்ட பாடமே ஒழிய புலிகள் மீதுள்ள பற்றோ அன்றிப் பிணைப்போ காரணமல்ல.

மேலும் அமைச்சர் தொண்டமான். விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ள அங்கீகாரமானது 'இலங்கையின் தேசிய நலன்' என்ற அடிப்படையிலேயே வழங்கப்பட்டதாகும்.

இலங்கையின் இறைமை பிரதேசஒருமைப்பாடு என்பன பற்றியெல்லாம் பேசும், சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த காலத்தில், இந்திய இராணுவத்தினருக்கு இலங்கையின் ஒரு பகுதியைத் தாரைவார்த்துக் கொடுத்தனர். தற்பொழுது, விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு இந்தியா மறைமுகமாகவும் நேரடியாகவும் போடும் அழுத்தங்களுக்கு பணிந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அஞ்சுகின்றனர். இந்நிலையில் அமைச்சர் தொண்டமானோ 'எமது நாடு ஒரு சுதந்திர நாடு. நாம் எமது தேசிய நலன்களின் அடிப்படையிலேயே எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். மற்றைய நலன்கள் எல்லாம் இரண்டாம் தரமானவை. இந்தியாவுடன் நல்லுறவை வைத்துக்கொள்வது அவசியம் தான் ஆனால், எமது தேசிய நலன்களைப் பேணுவதே அதிமுக்கியமானது' என்கிறார். அதாவது அவர் தமிழருக்காகவும் பேசவில்லை. விடுதலைப் புலிகளுக்காகவும் பேசவில்லை. இலங்கையின் நலன்குறித்தே பேசியுள்ளார்.

இவ்வாறான அமைச்சர் தொண்டமானின் கூற்றுக்களை எவரும் ஏற்காது மறுப்பார்களேயானால் அவர்கள் தேசிய நலனில் அக்கறை இல்லாதவர்கள் என்றே கூறவேண்டும். இதே வேளை, புலிகளுக்கு அமைச்சர் தொண்டமான் ஆதரவாகப் பேசுகின்றார் என யாராவது கூறுவார்கள். ஆனால், அவர்கள் அரசியலை மதிப்பீடு செய்யத் தெரியாதவர்களாகவும், உண்மையை உணர மறுப்பவர்களாகவுமே இருக்க முடியும்.

கொண்ட சீர்குலைவு வேலைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே உறுதியாக எதிர்த்து நின்றது. மற்ற இயக்கங்கள் யாவும் துரோகக் குழுக்களாக மாறி மாற்றார் வலையில் வீழ்ந்தன. இத்துரோகக் குழுக்களை ஒடுக்குவதிலும் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றனர்.

பேச்சுவார்த்தை என்ற பெயரால் இந்திய, சிங்கள அரசுகள் விரித்த நயவஞ்சக நாடகத்தில் மற்ற குழுக்கள் யாவும் ஏமாந்தபோதும விடுதலைப்புலிகள் இயக்கம் ஏமாறவில்லை.

'மாகாண அரசின் முதலமைச்சராகலாம், தாராளமான நிதி உதவி பெறலாம்' என இந்திய-சிங்கள அரசுகள் ஆசை வலை விரித்த போதும் இராணுவ பயத்தைக் காட்டி மிரட்டிய போதும் உறுதியாக எதிர்த்து நின்று தமிழீழ இலட்சியத்துக்காக உறுதியுடன் போராடி வரும் பெருமை தம்பி பிரபாகரன் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய இராணுவத்தை எதிர்த்து துணிக

லவிதமாக இருந்தாலும் சரி இருவரின் நிலையும் இப்பிரச்சினையில் ஒன்றுதான்.

தமிழீழவிடுதலைப்போராட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. கட்சி, மத, சாதி வேறுபாடின்றி தமிழ் மக்கள் அனைவரினாலும் ஆதரிக்கப் படவேண்டிய போராட்டமாக அதைக்கருதாமல் தங்களின் அரசியல் ஆதாயங்களுக்கான பிரச்சினையாகவே இதை இவர்கள் கருதி வந்திருக்கின்றனர்.

ஐந்துகோடி தமிழ் மக்களின் முதலமைச்சருக்கு இப்பிரச்சினையில் பிரதான பாத்திரம் உண்டு. கீழ்க்கண்டனவற்றை அவர்கள் செய்திருக்க வேண்டும்.

★ தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தாய்த்தமிழகத்தின் ஆதரவைத் திரட்டித்தரநடவடிக்கை எடுத்தல்.

★ இந்தியாவில் உள்ள அரசியற் கட்சித் தலைவர்கள் பிறமாநில முதல்வர்கள் ஆகியோரின் ஆதரவைத் திரட்ட உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.

★ தமிழீழ விடுதலைப்

தமிழீழப் பிரச்சினையின் உண்மையான வடிவத்தை டில்லிக்கு உணர்த்துவதற்குப் பதிலாக டில்லியின் நோக்கமறிந்து அதற்கேற்பவே இருவரும் செயற்பட்டு வந்துள்ளனர்.

தமிழீழப் போராட்டம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் அதற்குக் கைகொடுத்து உதவும் துணிவு படைத்த ஒருவர் தமிழக முதலமைச்சராக இல்லை என்பது வருந்தத்தக்கது. தங்கள் முதலமைச்சரின் இப் போக்கினைத் தமிழக மக்கள் விரும்பவில்லை.

கேள்வி:-

நீங்கள் தலைமை வகிக்கும் தமிழர் தேசிய இயக்கத்தின் பிரதான நோக்கம் என்ன?

பதில் -

எங்கள் இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள்:-

★ தமிழ் நாட்டிற்குத் தன்னுரிமை (சுயநிர்ணய உரிமை) பெறப் போராடுதல்.

★ தமிழீழம் உருவாக உதவி புரிதல்.

★ உலகத் தமிழரிடையே ஒற்றுமை ஏற்படுத்தல்.

மையை எமது மக்கள் மெல்ல உணரத் தொடங்கியுள்ளனர்.

வெற்றுக் கோஷங்களையும் வீண் ஆரவாரங்களையும் கண்டு மயங்கிய தமிழ்நாட்டு மக்கள் நடுவில் தமிழீழ இளைஞர்களின் அரிய தியாகங்கள் மகத்தான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன. கழுத்தில் நஞ்சுக் குப்பியுடனும், கையில் துப்பாக்கியுடனும் சிரித்த வண்ணம் சாவை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் வீரமும் தியாகமும் தமிழக இளைஞர்களைக் கவர்ந்து ஆட்கொள்ளத் தொடங்கியுள்ளன. தமிழக அரசியலில் படர்ந்துள்ள சந்தர்ப்பவாதக் கள்ளச் செடிகளையும், பதவி வெறி முட்புதர்களையும் சுட்டெரிக்கும் நெருப்பாக இது பரவி வருகின்றது. நாம் எதிர்பார்க்கும் சமூக மாற்றத்திற்கு இது வித்திட்டுள்ளது.

## காங்கிரஸ் அரசை அஜித்சிங் பிரிவு ஆதரிக்கும்

(டில்லி)

ஆட்சியிலுள்ள அரசாங்கம் நீடிக்கச் செய்வதை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கப்போவதாக ஜனதா தளத்திலிருந்து பிரிந்து சென்றுள்ள அஜித்சிங் பிரிவு தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய இக்குழுவின் பிரதிநிதியாகிய ரசீத் மசூத் இத்தகவலைத் தெரிவித்தார்.

மீண்டும் புதிதாக தேர்தல்கள் நடந்தால் இந்தச் சுமையை இந்த நாட்டினால் தாங்கிக் கொள்ள முடியாது என்ற காரணத்தினால் தான் அரசுக்கு ஆதரவு அளிப்பதான இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும்,

இதற்காகத் தான் ரயில்வே வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகத் தாம் வாக்களித்ததாகவும் ரசீத் மசூத் தெரிவித்துள்ளார்.

# அயோத்தியில் ஆலயம் அமைத்தால் மாநில அரசாங்கம் கலைக்கப்படும்

## உத்தரப் பிரதேச அரசிற்கு மத்திய அரசு எச்சரிக்கை

(டில்லி)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநில அரசாங்கம் சர்ச்சைக்குரிய அயோத்தியா பகுதியில் இந்து ஆலயம் ஒன்றை அமைக்க முற்பட்டால் அங்குள்ள மாநில அரசாங்கம் கலைக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

இராம ஜென்மபூமி பாபர் மசூதிபிரச்சினைக்கு உட்பட்ட அயோத்தியா பகுதியில் இந்து ஆலயம் ஒன்று கட்டப்படும் என்று பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்ததையடுத்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய உள்துறை அமைச்சர் எஸ்.பி சவான் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாபர் மசூதி பள்ளிவாசலை இடித்து விட்டு அவ்விடத்தில் இராமர் ஆலயம் கட்டப்படுவதை ஏற்க முடியாதெனவும், எந்த ஒரு மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கத்தின் உத்தரவுக்கமைய நடந்து கொள்ளத் தவறும் மாநில அரசாங்கங்கள் அரசியல் யாப்பிற்கிணங்க கலைக்கப்படுவதை தவிர வேறு வழியில்லை எனவும் தெரிவித்தார்.

## தேர்தல் நடத்துமாறு கம்யூனிஸ்ட்கட்சி கோரிக்கை

(டில்லி)

ஜம்மு - காஷ்மீர் பகுதியில் தேர்தலை நடத்தக்கூடிய சூழல்ஒன்றை உருவாக்குமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் இந்திரஜித்குப்தா இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுள்ளார். சோலாப்பூரில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில் தேர்தல் பற்றிய எல்லா விடயங்களையும் எல்லாக் கட்சிகளுடனும் அரசு விவாதிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றிக் குறிப்பிடுகையில் பகிரங்க விற்பனைப் பொருளாதாரத்தை தமது கட்சி எதிர்க்கவில்லை எனவும் எனினும் அதன் சுமை ஏழை மக்களைப் பாதிக்கக் கூடாது எனவும் கேட்டுக்கொண்டார்.

## தளபதிகள் பேட்டிகளை தவிர்த்தல் நல்லது

[டில்லி]

இராணுவத்தளபதிகள், இந்தியாவின் உள்,வெளி விவகாரங்கள் பற்றி பேட்டியளிப்பதற்கு இந்திய அரசு வரவேற்புத் தெரிவிக்கவில்லை என இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

லோக்சபாவில் உரையாற்றிய அவர், பொதுவாக இராணுவத்தினர் இவைகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லதெனவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்-காஷ்மீர் பிரச்சினை பற்றி ஜெனரல் றொட்ரிகேஸ் பத்திரிகைக்குப் பேட்டியளித்தது குறித்து லோக்சபாவில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே இதனை சரத் பவார் தெரிவித்தார்.

அத்துடன் தனது அமைச்சின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் இராணுவம் இயங்குவதாகவும்,

இத்தகைய பத்திரிகைப் பேட்டிகள் இனிமேல் இடம்பெறமாட்டாது என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

## சோவியத்தின் உளவு பற்றி இஸ்ரேல் ஆர்வம்

(ஜெருசலேம்)

முன்னாள் சோவியத் யூனியன் இஸ்ரேல் மீது உளவு பார்ப்பதை எவ்விதம் கையாண்டது என்பதை சோவியத் யூத குடிபெயர்ந்தவர்களிடமிருந்து அறிந்து கொள்வதில் இஸ்ரேலிய அதிகாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

1989 இல் இருந்து இன்று வரை 400,000 க்கு மதிகமான சோவியத் யூதர்கள் இஸ்ரேலில் குடிபெயர்ந்துள்ளனர். இவர்களிற் சிலர் உளவு சம்பந்தமாக அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஈழநாதம்

## றெலோ குழுவினர் ஆயுதம் கோருகின்றனர்

(கொழும்பு)

தென்இந்தியாவிலிருந்து வந்துள்ள தமது குழுவினருக்கு ஆயுதங்கள் வழங்கும் படி கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சுசெயலாளர்சிறில்ரணதுங்காவையும், சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனையும் சந்தித்த றெலோவின் தூதுக் குழுவினர் கோரியுள்ளனர்.

கல்முனையின் சில பகுதிகளில் குடியேறியிருக்கும் தமது குழுவின் உறுப்பினர்கள் முஸ்லிம் காடையர்களின் தொல்லைகளுக்கு உள்ளாகுவதாகவும், அதற்காகவே தாம் ஆயுதங்களைக் கோருவதாகவும் றெலோவின் தூதுக் குழுவில் இடம்பெற்றசட்டத்தரணி சிறிகாந்தாவும் குகன்சாப்பும் கூறியுள்ளனர்.

இதனிடையில் அண்மையில் மட்டக்களப்பு உணவு விடுதியில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்திற்கும் றெலோவினருக்கும் தொடர்பு இருக்கலாமென விசாரணை நடத்திவரும் பொலிசார் கருதுகின்றனர்.

### சிலாவத்துறை

பிடிக்க முடியாத இராணுவத்தினர் மீண்டும் சிலாபத்துறை இராணுவ முகாமை நோக்கிப் பின் வாங்கிச் சென்று விட்டனர். இச்சண்டையின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

## அரச அதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் நேற்று கொழும்பிற்கு திடீர் பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். என தெரிய வருகின்றது.

யாழ். அரசஅதிபரின்இத்திடீர் பயணம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (பா)

## மாநில-மத்திய அரசுகளுக்கிடையில் முரண்பாடுகள் இல்லை -நட்வர்சிங்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் விவகாரம் தொடர்பாக மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே கருத்து வேறுபாடு இல்லை என்று கொழும்பு வந்துள்ள இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் கூறியுள்ளார்.

அவர் செய்தியாளர்களிடையே பேசுகையில் மேலும் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளால் எழுந்துள்ள பிரச்சினை குறித்து தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடு இல்லை. விடுதலைப் புலிகள் குறித்து ஜெயலலிதா சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

### ஒருமாதப்

டாங்கி எதிர்ப்புப் பீரங்கி புலிகளால் கைப்பற்றப்பட்டது. அத்தோடு 50 கலிபர் ஒன்றும், ஜி.பி.எம் ஜி. ஒன்றும் ஏ. கே. எல் எம். ஜி. பத்தும், ஆர்.பி ஜி. மூன்றும் கைப்பற்றப்பட்டன.

இதைத்தவிர எழுபதிற்கும் மேற்பட்ட தானியங்கித் துப்பாக்கிகளும்ஆயிரக்கணக்கான பலரவை ஞம் வேறுபல இராணுவத் தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## தேர்தல் ஆணையாளர் பதவி இல்லாது செய்ய ஆலோசனை

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் பதவியை இல்லாமல்செய்து தேர்தல் ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் திட்டத்தைச் சமர்ப்பிக்க 1991 இல் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவில் அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள். தேர்தலைக் கண்காணிப்பதும் நடாத்துவதும் ஆணைக்குழுவின் பிரதான கடமையாகும்.

இதேவேளை, 1989 பெப்ரவரி 15 ஆம் திகதி இடம் பெற்ற தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையாளரின் அறிக்கை பாராளுமன்றக் கூட்டத்தொடரில் ஓர் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படவுள்ளது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு. அது தொடர்பாக ஆராய்ந்து ஆலோசனை சமர்ப்பிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவது வழக்கம். அதன் பிறகு ஆலோசனை தொடர்பாக நடவடிக்கை எடுப்பது பற்றிபாராளுமன்றம்ஆராயும்

### நேரில்வந்து

மாவட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை யாழ். கல்விததிணைக்களத்தில்பெற்றுக் கொள்ளலாமென யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (பா)

### தீவகப்

ளது. இதனால் தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 500 ஆசிரியர்கள் பாதிப்படைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் கடந்த மாதம் வரை வேலணைக் கோட்டத்தால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### நிதி சேகரிக்கும்

## கலை நிகழ்ச்சிகளுக்கு முன் அனுமதி பெறவும்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் கலை நிகழ்ச்சிகளை நிதி சேகரிப்பதன் பொருட்டு நடத்துவோர் முன் கூட்டியே விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தில் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென மேற்படி கழகம் அறிவித்துள்ளது.

இக் கழகம் நேற்று விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்றில் இது பற்றித் தெரிவித்துள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தில் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென நாம் அறிவித்திருந்தும் பலர் எங்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் நிகழ்ச்சிகளை நடத்துவது நமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. என்றும்,

ஆகவே இனிமேல் எக்காரணம் கொண்டும் யாராவது எமது முன்அனுமதியின்றி நிதி நிகழ்ச்சிகளை நடத்த முனைந்தால் அந்த நிகழ்ச்சிகள் தடை செய்யப்படும் என்றும்,

மேமாதக்கடைசி வரை தனியார்யாருக்கும் நிதிசேர்ப்பதற்காக அனுமதிகள் வழங்கப்படாது என்பதனையும், இதன் மூலம் சகல கழகங்கள், தனியார் அமைப்புக்கள் போன்றவற்றுக்கு அறியத் தருகின்றோம் என்றும்,

எங்களிடம் முன் அனுமதி பெறாமல் ஏப்ரல், மே மாதங்களில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளவர்கள் யூன் மாதம் வரை அந்த நிகழ்ச்சிகளை ஒத்திப் போடும் படியும் கேட்டுக் கொள்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

## சந்திக்க வேண்டுகோள்

ஆண்டு ஐந்து மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் இன்று காலை 9.00மணிக்கு தத்தமது கோட்டக்கல்விப்பணிப்பாளர்களைச் சந்திக்கும்படி கேட்டுக் கொள்பட்டிருக்கின்றனர்.

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களது பட்டியலின் மறு பிரதிகளையும் தம்முடன் எடுத்துச்செல்லும்படியும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

### 140 மில்.

தயாரிக்கத்தவறியதால் இந்த நிலை என்று அந்த அறிக்கை சொல்கின்றது.

அதிபர்கள் பாடசாலை நிதியை பல வழிகளிலும் செலவு செய்கிறார்கள். பரீட்சைக் கட்டணம், பாடசாலை அபிவிருத்திநிதி, பாடசாலை 'டைக்' காசு, கலை நிகழ்ச்சி வசூல், அதிஷ்ட லாபச் சீட்டு விற்பனை, விஞ்ஞான தினம், வர்த்தக தினம், ஆங்கில தினம் என்றெல்லாம் பணம் அறவிடப்படுகிறது என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுகிறது.

தேசிய பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஒழுங்கீனங்களை அவதானித்ததாகவும்கணக்காளர் நாயகம்காமினி ஏப்பா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு

### லெப். நளன்



மூதூர் கொட்டாப்புளி என்னும் இடத்தில் சிறிலங்காஇராணுவத்துடனான நேரடிமோதலில் 13-06-91 இல் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த லெப். நளன் (செல்வசேகரம் கணேசலிங்கம் 6 ஆம் கொலனி கிளிவெட்டி மூதூர்) நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆக்கிரமிப்பாளரை விரட்டிய வேங்கைகள்







### மணலாற்று

ளானது.புலிகளின் இத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது இராணுவத்தினர் சிதறி ஓடினர். இத்தாக்குதலில் 30 றகு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 80 ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆறு இராணுவ கனங்கள் கவசவண்டிகள் உட்ப புலிகளால் அழிக்கப்பட்டன அத்தோடு ஆர். சி. எல். பீரங்கி, 50 கலிபர் துப்பாக்கி உட்பட பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ளினால் முறியடிக்கப்பட்டுக் கொண்டே வந்தது. இதே வேளை, பத்தொன்பதாம் திகதி 15ஆம் கட்டை என்னும் இடத்தில் நடந்த மோதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் ஆயுதங்கள் பலவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

இறுதி முயர்சியாக இராணுவத்தினர் நேற்று முன்தினம் பின்புறமாக காட்டுப்பகுதிக்குள் நுழைந்த இராணுவ அணியின் முயற்சிகளையும்



கப்டன் மணாளன்
(டயஸ்)



லெப். இளமாறன்
(பிரியன்)



வீரவேங்கை நிலவன்
(சிலோச்சன்)



கப்டன் சிறீமதி

மணலாறு - கொக்குத்தொடுவாய் பகுதியில் 23-03-1992 இல் காட்டுப்பகுதிக்குள் நுழைய முயன்ற சிங்கள இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் உக்கிரமாக மோதி விரட்டியடித்தனர். இத் தீரமிகு போரில் ஏழு விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.



வீரவேங்கை தர்சினி



லெப். நளினி



வீரவேங்கை மான்விழி

லுக்கு ஈடுகொடுக்க முடியாது இராணுவத்தினர் சிதறி ஓடினர். இத்தாக்குதலில் 30 றகு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 80 றகு மேற்பட்டோர் காயமடைந்தனர் ஆறு இராணுவ வ கவங்கள் கவசவண்டிகள் உட்ப புலிகளால் அழிக்கப்பட்டன அத்தோடு ஆர். சி. எல். பீரங்கி, 50 கலிபர் துப்பாக்கி உட்பட பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் அப்பகுதியில் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டனர்.

இதன் பின்னர் விடுதலைப் புலிகளின் கவனத்தை திசை திரும்பும் நோக்கமாக தாக்குதல்களை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்தது. ஆனால், புலிகள் இராணுவத்தினரை பல முனைகளிலும் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இதேவேளை சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்திகளும், கடற்படை பீரங்கிக் கப்பல்களும் மணலாற்றுக் காட்டினுள் குண்டுமாரி பொழிந்தன. அத்தோடு சூழவுள்ள இராணுவ முகாம்களிலிருந்து இரவு பகல் வேறுபாடு இன்றி எறிகணைத் தாக்குதலும் இடம் பெற்றன.

ஆனால் இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சி புலிகளின் திகதி 15ஆம் கட்டை என்னும் இடத்தில் நடந்த மோதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் ஆயுதங்கள் பலவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

இறுதி முயர்சியாக இராணுவத்தினர் நேற்று முன்தினம் பின்புறமாக காட்டுப்பகுதிக்குள் நுழைந்த இராணுவ அணியின் முயற்சிகளையும் புலிகள் வெற்றிகரமாக முறியடித்தனர்.

இறுதியில் புலிகளின் எதிர் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்கமுடியாத இராணுவத்தினர் தமது இராணுவ நடவடிக்கைகள் சகலவற்றையும் கைவிட்டு நேற்றுக் காலை 7 மணியளவில், மண்கிண்டி இராணுவமுகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இதே போன்றதொரு நடவடிக்கையை கடந்த வருடம் செப்டம்பரில் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு மாத மோதலின்பின் தோல்வியுடன் பின்வாங்கியமை குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆர்வலர் அனைவரையும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞான மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.


## நூலறிமுகமும், ஆய்வரங்கும்

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும்
விபுலானந்தரும்
'சாளரம்'
வெளியீடு

29-03-92 ஞாயிறு மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
'சாளரம்'
வெளியீட்டாளர்கள்

இந் நூல் 1920களில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் அமைப்பில் விபுலானந்தர் ஆற்றிய பங்கு பற்றி ஆய்வு செய்யும் வகையில் எழுதப்பெற்றது. (சி/4096)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.